www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

S

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்: 1 2 5 1 6 -

## பொதுத் தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 14×1=14

1. சர்ப்பயாகம் என்னும் நூலின் ஆசிரியர் .............
   அ) பரலி. சு. நெல்லையப்பர் ஆ) தி.சு.நடராஜன்
   இ) சிற்பி. பாலசுப்பிரமணியம் ஈ) கி.ராஜநாராயணன்
2. உலகப் புவி நாள் .............
   அ) ஜூன் 5 ஆ) ஏப்ரல் 22 இ) ஜூலை 5 ஈ) டிசம்பர் 24
3. ஓர் மூலம் இல்லான் ............
   அ) இராமன் ஆ) இலக்குவன் இ) சடாயு ஈ) வீடணன்
4. மஸ்னவி எக்கருத்துகள் நிரம்பிய இசைக்கவிதை ...........
   அ) வாழ்வியல் ஆ) எதார்த்தம் இ) ஆன்மீகம் ஈ) படைப்பியல்
5. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?
   அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
   இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி
6. "காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள் ...........
   அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி
7. களிற்றியானை நிரையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை ...........
   அ) 180 ஆ) 100 இ) 120 ஈ) 150
8. வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப .......... படிமம்.
   அ) வினை ஆ) பயன் இ) மெய் ஈ) உரு
9. திருக்குறளில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை ...........
   அ) 3 ஆ) 27 இ) 9 ஈ) 4
10. யானை புக்க புலம்போல - இவ்வுமைக்குப் பொருத்தமான தொடர் .............
    அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது
    ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
    இ) பிறருக்குப் பயன்படும் தனக்குப் பயன்படாது
    ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்
11. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?
    அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. மயிலை சீனி, வேங்கடசாமி அவர்களின் முதல் நூல் ............
அ) களப்பிரர் ஆட்சியில் தமிழகம் ஆ) மத்த விலாசம்
இ) கிறிஸ்துவமும் தமிழும் ஈ) தமிழ்ப் பேரவைச் செம்மல்

13. 17 நரம்புகளைக் கொண்ட யாழ் .............
அ) பேரியாழ் ஆ) மகர யாழ் இ) சகோட யாழ் ஈ) செங்கோட்டி யாழ்

14. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர் ...........
அ) சிவஞான முனிவர் ஆ) மயிலை நாதர் இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்

## பகுதி - II

### *பிரிவு - 1*

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக: 3×2=6**

15. ஞாலத்தின் பெரியது எது?
16. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.
17. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
18. ஒருமுக எழினி, பொருமுக எழினி, குறிப்பு எழுதுக.

### *பிரிவு - 2*

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்: 2×2=4**

19. நடைஅழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. புக்கில், தன்மனை சிறுகுறிப்பு எழுதுக.
21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

### *பிரிவு - 3*

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்: 7×2=14**

22. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:*
*விலை, விளை, விழை*
23. *மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:*
ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.
24. *பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக :*
வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.
25. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:*
அ) அறிவில்லாதவன் ஆ) தாமரை
26. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:*
இனநிரை அல்லது ஏழையென
27. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:*
எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கை இன்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.
28. *மரபுத்தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக:*
அகலக்கால்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



29. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:*

அ) அறுத்து ஆ) பேசுவார்

30. *கலைச் சொல்லாக்கம் தருக:*

அ) Sound effect ஆ) Debit Card

## பகுதி - III

### *பிரிவு - 1*

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக: 2×4=8**

31. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
32. சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
33. 'ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

### *பிரிவு - 2*

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக: 2×4=8**

35. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் விளக்கம் எழுதுக.
36. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.
37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
38. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

### *பிரிவு - 3*

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3×4=12**

39. உவமையணியை விளக்குக.

(அல்லது)

நிரல் நிறை அணியை விளக்குக.

40. *இலக்கிய நயம் பாராட்டுக (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக):*

பிறப்பினால் எவர்க்கும் - உலகில் பெருமை வராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம் நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித் தீண்ட ஒண்ணாதார்.

- கவிமணி தேசிக விநாயகம்

41. *பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக*

அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

(அல்லது)

ஆ) தினை விதைத்தவன் தினை அறுப்பான்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



42. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி - IV

குறிப்பு அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: 3×6=18

44. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) எச்.ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனை கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) 'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு' நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'கோடை மழை' கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

## பகுதி - V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6

அ) "காய்நெல்" .......... - எனத்தொடங்கும் "புறநானூற்றுப்" பாடலை எழுதுக.

ஆ) 'நோய்' என முடியும் குறளை எழுதுக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com